# கரூர் நகராட்சி
## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2020ம் ஆண்டு பிப்ரவரி 28ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.25மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

1)கரூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP) 2017–2018ம் ஆண்டின்கீழ் ரூ.5.00கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளின் மதிப்பீடுகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றது. மேற்படி திட்டத்தில் ரூ.10,94,000/– சேமிப்பில் உள்ளது. அத்தொகையினை 2018–2019ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தற்போது விடுவிக்கப்பட்ட மான்யத் தொகை ரூ.300.00 லட்சத்தில் மேற்கண்ட தொகையை பிடித்தம் செய்து மீதி தொகை ரூ.2,89,06,000/– மட்டும் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் மீதமுள்ள தொகை ரூ.10,94,000/– பொதுநிதியில் செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2)மேற்படி 2018–2019ம் ஆண்டு சாலைகள் அபிவிருத்தி திட்டம் (TURIP) வழிவகை செய்யப்பட்ட மான்யம் ரூ.300.00லட்சத்தில் ரூ.10,94,000/–யை பிடித்தம் செய்து மீதமுள்ள தொகை ரூ.2,89,06,000/– மட்டும் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளதால் மீதமுள்ள தொகை ரூ.10,94,000/–யை நகராட்சி பொதுநிதியில் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(இ1/8107/2018)

தீர்மான எண்.2029 அனுமதிக்கப்பட்டது

2)2017–2018ம் ஆண்டிற்கான மூலதன மான்யம் மற்றும் இயக்கமும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தில் கரூர் நகராட்சியில் அமைக்கப்பட்ட புதிய அலுவலக கட்டிடத்தில் உட்கட்டமைப்பு பணிகள், முகப்பு பணிகள் மற்றும் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.400.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.15040/2017/இ1, நாள்.06.03.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கான மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35683/2014/டிஒ2, நாள்.16.05.2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த சிவபரமேஸ்வரி கன்ஸ்டரக்ஷன் அன் கோ, நாமக்கல் நிறுவனத்திற்கு 31.07.2018ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி பணியில் மதிப்பீட்டில் வழிவகை இல்லாத சில முகப்பு தோற்றப்பணிகள், பெயர் பலகை பொருத்துதல் Stainless steel Hand Rails பொருத்துதல் மற்றும் Entrance Teak Wood door போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/4618 /2019)

தீர்மான எண்.2030 அனுமதிக்கப்பட்டது

3)2017 –2018ம் ஆண்டிற்கான மூலதன மான்யம் மற்றும் இயக்கமும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தில் கரூர் நகராட்சியில் அமைக்கப்பட்ட புதிய அலுவலக கட்டிடத்தில் உட்கட்டமைப்பு பணிகள், முகப்பு பணிகள் மற்றும் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.400.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.15040/2017/இ1, நாள்.06.03.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கான மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35683/2014/டிஓ2, நாள்.16.05.2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த சிவபரமேஸ்வரி கன்ஸ்டரக்ஷன் அன் கோ, நாமக்கல் நிறுவனத்திற்கு 31.07.2018ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிய அலுவலக கட்டிடத்தில் முதல் தளத்தில் நகர் நல அலுவலர் அறை, உதவி பொறியாளர் அறை, இரண்டாம் தளத்தில் நகரமைப்பு அலுவலர் அறை, நகரமைப்பு பிரிவு மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கிற்கு தேவையான புதிய மேஜைகள், நாற்காலிகள் Wooden Rack. Portion work போன்ற பணிகளை மேற்கொள்ள பட வேண்டியுள்ளதில் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/4618 /2019)

தீர்மான எண்.2031 அனுமதிக்கப்பட்டது

4)2017 –2018ம் ஆண்டிற்கான மூலதன மான்யம் மற்றும் இயக்கமும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தில் கரூர் நகராட்சியில் அமைக்கப்பட்ட புதிய அலுவலக கட்டிடத்தில் உட்கட்டமைப்பு பணிகள், முகப்பு பணிகள் மற்றும் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.400.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.15040/2017/இ1, நாள்.06.03.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கான மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35683/2014/டிஓ2, நாள்.16.05.2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த சிவபரமேஸ்வரி கன்ஸ்டரக்ஷன் அன் கோ, நாமக்கல் நிறுவனத்திற்கு 31.07.2018ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிய அலுவலக கட்டிடத்தில் தரைதளத்தில் நகர்மன்றத் தலைவர் அறை, துணை நகர்மன்றத் தலைவர் அறை, முதல் தளத்தில் பொறியாளர் அறை, பொறியாளர் பிரிவு மற்றும் வருவாய் அலுவலர் அறைகளுக்கு தேவையான புதிய மேஜைகள், நாற்காலிகள், Wooden portion, File rack போன்ற பணிகளை மேற்கொள்ளபட வேண்டியுள்ளதால் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/4618/2014)

தீர்மான எண்.2032 அனுமதிக்கப்பட்டது

5)2017–2018ம் ஆண்டிற்கான மூலதன மான்யம் மற்றும் இயக்கமும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தில் கரூர் நகராட்சியில் அமைக்கப்பட்ட புதிய அலுவலக கட்டிடத்தில் உட்கட்டமைப்பு பணிகள், முகப்பு பணிகள் மற்றும் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.400.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் செயல்முறை உத்திரவு கடித ந.க.எண்.15040/2017/இ1, நாள்.06.03.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கான மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் , நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35683/2014/டிஓ2, நாள்.16.05.2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்த சிவபரமேஸ்வரி கன்ஸ்டரக்ஷன் அன் கோ, நாமக்கல் நிறுவனத்திற்கு 31.07.2018ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிய அலுவலகத்திற்கு தேவையான மேஜைகள் நாற்காலிகளுக்கு தற்போது இயங்கி வரும் அலுவலகத்தில் நல்ல நிலையிலுள்ள மர மேஜைகள், நாற்காலிகள் மற்றும் தளவாடச் சாமான்களை பழுதுகள் செய்து Lamination செய்து வருவாய் பிரிவு, பிறப்பு மற்றும் இறப்பு பிரிவு, நகர் நல பிரிவுகளில் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் மேலும் தரைதளத்தில் ஆணையாளர் அறை, ஆணையாளர் உதவியாளர் அறை, சிறிய கூட்ட அரங்கு, கணிணி பிரிவு, வரி வசூல் மையம், மேலாளர் அறை மற்றும் பொதுப்பிரிவு அறைகளுக்கு தேவையான நாற்காலிகள் மேஜைகள், Wood Rack மற்றும் Partition work போன்ற பணிகளை மேற்கொள்ளபட வேண்டியுள்ளதால் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/4618/2014)

தீர்மான எண்.2033 அனுமதிக்கப்பட்டது

6)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு–34ல் எஸ்.வெள்ளாளப்பட்டி பகுதியில் பொதுமக்களின் அடிப்படை தேவைக்காக கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019ல் உயர்நீர்தேக்கத் தொட்டி கட்டுமான பணி நடைபெற்று வருவதால் மேற்கண்ட பணிக்கு இடையூறாக உள்ள தெருவிளக்கு மின் கடத்திகளை கட்டிட அமைவிடத்தின் மேல்புறமாக சாலையின் மேற்குபுரம் புதிய மின்கம்பம் அமைத்து மின்கடத்திகளின் வழித்தடங்களை மாற்றியமைத்து தருமாறு தமிழ்நாடு மின்வாரியத்திற்காக இவ்வலுவலக கடிதம் மூலம் விண்ணபத்தின்படி மின்வாரியத்தில் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.66,480/–யை தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள் பிரிவு15ன்கீழ் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.66,480/–யை செலுத்த பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/2020)

தீர்மான எண்.2034 அனுமதிக்கப்பட்டது

7)கரூர் நகராட்சியில் கரூர் பகுதி குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டப் பணியினை ரூ.2467.00இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசு ஆணை எண்.128 நாள்.14.07.2010 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணையின்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப் பணியினை தமிழ்நாடு வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் 90சதவீதம் முடிக்கப்பட்டு 02/2016 முதல் கரூர் நகருக்கு குடிநீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தில் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணியில் 15mm அளவு MDPE குழாய், 12mm பெருவில், நீர் அளவுமானி மற்றும் திருகு குழாய் அமைத்து இணைப்பு வழங்கும்வகையில் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி, சணப்பிடிட்டி, இனாம்கரூர் மற்றும் கரூர் உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சீரான சம அளவு குடிநீர் தினசரி வழங்கும்வகையில் அனைத்து குடியிருப்புகளுக்கும் ஏற்கனவே குடிநீர் இணைப்பு வழங்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் குடிநீர் இல்லாத குடியிருப்புகள் என அனைத்து குடியிருப்புபுளுக்கும் குடிநீர் இணைப்புகளை மாற்றி அமைத்தல் மற்றும் புதிதாக வழங்குதல் என 45438 குடிநீர் இணைப்புகளை 15mm அளவு MDPE குழாய், 12mm பெருவில் ப்ளோகண்ட்ரோல் வால்வு நீர் அளவுமானி, அளவுமானி பாதுகாப்பு பெட்டி

மற்றும் திருகு குழாய் பொருத்தி இணைப்பு வழங்க UIDSSMT திட்டத்தில் வட்டியில்லா கடனாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இச்சூழ்நிலையில் கரூர் பகுதிக்கு Kfw குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் பணியில் 15mm MDPE குழாய் 12mm பெருவில், நீர் அளவுமானி மற்றும் திருகு குழாய் அமைத்து குடிநீர் இணைப்பு வழங்கும் வகையில் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால் அதன்படி குடிநீர் இணைப்புகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது நகராட்சியில் வீட்டு குடிநீர் இணைப்புகள் பெருவிலுடன் ப்ளோ கன்ட்ரோல் வால்வு மற்றும் நீர் அளவுமானிக்கு பாதுகாப்பு பெட்டியுடன் சேர்த்து இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதால் கரூர் பகுதிக்கு Kfw திட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வழங்கப்பட உள்ள குடிநீர் இணைப்புகளையும் நகராட்சியில் வழங்கி வரும் குடிநீர் இணைப்புகள் போல பெருவிலுடன் ப்ளோகன்ட்ரோல் மற்றும் நீர் அளவுமானிக்கு பாதுகாப்பு பெட்டியுடன் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அனைத்து பகுதிகளுக்கும் சம அளவு தினசரி சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும் என தெரிவிக்கப்பட்டதில் நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர திட்ட கோட்டம் கரூர் அவர்களின் கடித ந.க.எண்.F.Karur/INSIS/JDO/2019 நாள்.**21.03.2019**ல் கரூர் பகுதி குடிநீர் விநியோகத் திட்டத்தில் வழிவகை செய்துள்ள **16136** வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணியில் கூடுதலாக ப்ளோகன்ட்ரோல் வால்வு மற்றும் நீர் அளவுமானி பாதுகாப்பு பெட்டியுடன் இணைப்புகள் வழங்க கூடுதலாக திட்ட மதிப்பீட்டில் ரூ.**110.01**இலட்சம் நிதி ஒதுக்கீடு கூடுதலாக தேவைப்படும் என்றும், இல்லையெனில் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்த **16136** குடிநீர் இணைப்புகளில் **2730** எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளை குறைத்து வழங்குவதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.**1649**, நாள்.**31.07.2019**ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர திட்ட கோட்டம், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.F.Karur WSIS/JDO/2020. நாள்.**26.02.2020** ல் **13406** குடிநீர் இணைப்புகளில் **701** எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளை குறைத்து வழங்குவதற்கு தங்களது இசைவினை தெரிவிக்குமாறு குறிப்பிட்டுள்ளார்.

கரூர் நகராட்சி கரூர், தாந்தோணி, இனாம்கரூர் மற்றும் சணப்பிரட்டி அனைத்து பகுதி முழுமைக்கும் ஒரே முறையிலான குடிநீர் இணைப்புகளை வழங்கினால்தான் சமஅளவு சீரான தினசரி குடிநீர் வழங்க இயலும் என்பதனைக் கருத்தில் கொண்டு கூடுதல் செலவினத் தொகையினை அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ளும்வகையில் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள **16136** குடிநீர் இணைப்புகளுக்கு பதிலாக ஏற்கனவே **2730** குடிநீர் இணைப்புகள் போக மீதமுள்ள **13406** குடிநீர் இணைப்புகளிலிருந்து குறையும் **701** குடிநீர் இணைப்புகள் நகராட்சியில் வழங்கப்படும் குடிநீர் இணைப்புகள் வழங்கும் திட்டம் அல்லது பிற திட்டங்களிலிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும் அல்லது நகராட்சி நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

Kfw குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டத்தில் கரூர் பகுதி குடிநீர் விநியோக அபிவிருத்தி திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஏப்ரல்–**2013** அன்றே ஒப்பந்தத்தின்படி பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டிருக்க வேண்டும். திட்டம் துவங்கி எட்டு ஆண்டுகள் ஆன நிலையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருக்களை அரசுக்கு அனுப்பவதில் திட்ட நிதி ஒதுக்கீடு பெறுவதில் திட்டப்பணியினை முழுமையாக முடித்து நகராட்சி வசம் ஒப்படைப்பதில் காலதாமதம் ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு செயலர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய **08.09.2017**ம் தேதிய கூட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் திட்டப் பணியில் குடிநிர் இணைப்புகள் வழங்கும் பணிகள் கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவை என தெரிவித்து திட்டப் பணியினை காலம் கடத்தாமலும், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் முடிவு எடுத்து திட்டப் பணியினை முழுமையாக முடிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளதாலும், நகராட்சியில் தற்போது குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதினால் அத்திட்டத்திலோ அல்லது பிற திட்டங்களிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று அல்லது நகராட்சி நிதியின் மூலமாக Kfw திட்டத்தில் வழங்கப்பட வேண்டிய **13406** குடிநீர் இணைப்புகளில் **12705**யை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை ப்ளோகன்ட்ரோல் வால்வு மற்றும் நீர் அளவுமானி பாதுகாப்பு பெட்டியுடன் இணைப்புகள் வழங்கிடவும், வித்தியாசப்படும் **701** எண்ணிக்கையிலான குடிநீர் இணைப்புகளை உரிய நிதி ஒதுக்கீடு அல்லது நகராட்சி நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/5808/2006)**

தீர்மான எண்.**2035** அனுமதிக்கப்பட்டது

**8)**கரூர் நகராட்சிக்குட்பட்ட **2**வது வார்டு வேலுச்சாமிபுரம் **4**வது கிராஸ், **3**வது வார்டு எல்.ஜீ.பி நகர், **4**வது வார்டு வையாபுரி நகர் குறுக்குத் தெரு மற்றும் **7**வது வார்டு வள்ளுவர் தெரு ஆகிய பகுதியில் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பழுதடைந்த மழைநீர் வடிகாலினை சீரமைக்கும் பணி மற்றும் புதிதாக சிறுபாலங்கள் அமைக்கும் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**10.00**இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/1169/2020)**

தீர்மான எண்.**2036** அனுமதிக்கப்பட்டது

**9)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**4**, வையாபுரி நகர் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் பழுதடைந்தும், வடிகால் வசதி இல்லாத பகுதிகளிலும் வடிகால் வசதியினை ஏற்படுத்தி தருமாறு அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை வைக்கப்பட்டதற்கிணங்க பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**25.00**இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/1169/2020)**

தீர்மான எண்.**2037** அனுமதிக்கப்பட்டது

**10)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **48** வரை உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், வடிகால்கள், கட்டிடங்கள் மற்றும் கழிப்பிடம் ஆகிய பணிகள் பொது மக்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும் வார்டு எண்.**48**, மாளமநாயக்கன்பட்டியில் சிறு சமுதாய கூடம் அமைத்து கொடுக்குமாறு அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை வைத்ததின் பேரில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**2.50**இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/1169/2020)**

தீர்மான எண்.**2038** அனுமதிக்கப்பட்டது

**11)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**36** வடக்கு காந்திகிராமம் இ.பி காலனி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பழுதடைந்த மழைநீர் வடிகாலினை சீரமைக்கும் பணி மற்றும் புதிதாக சிறுபாலங்கள் அமைக்கும் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**6.00**இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/1169/2020)**

தீர்மான எண்.**2039** அனுமதிக்கப்பட்டது

**12)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**37** முதல் **48** வரை உள்ள தாந்தோணி பகுதிகளில் அமைந்துள்ள சிறுபாலங்கள் மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கு உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் போக்குவரத்திற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அப்பகுதி பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பழுதடைந்த சிறுபாலத்தை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.00**இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/1169/2020)**

தீர்மான எண்.**2040** அனுமதிக்கப்பட்டது

**13)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **48** வரை உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், வடிகால்கள், கட்டிடங்கள் மற்றும் கழிப்பிடம் ஆகிய பணிகள் பொது மக்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.**36**, ஸ்ரீ அம்மன் கார்டன் பூங்காவில் நகராட்சிக்கு சொந்தமான பொருட்கள் வைப்பதற்கென அறை எதுவும் இல்லாத காரணத்தினாலும், நகராட்சி பணிகளுக்காக உபயோகப்படுத்தும் பொருட்களை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு அப்பகுதியில் பொருட்கள் வைப்பு அறை அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**10.00**இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/1169/2020)**

தீர்மான எண்.**2041** அனுமதிக்கப்பட்டது

14)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 48 வரை உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், வடிகால்கள், கட்டிடங்கள் மற்றும் கழிப்பிடம் ஆகிய பணிகள் பொது மக்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.36 வடக்கு காந்திகிராமம் பூங்காவில் நகராட்சிக்கு சொந்தமான பொருட்கள் வைப்பதற்கென அறை எதுவும் இல்லாத காரணத்தினாலும், நகராட்சி பணிகளுக்காக உபயோகப்படுத்தும் பொருட்களை பாதுகாப்பாக வைக்கும் பொருட்டு அப்பகுதியில் பொருட்கள் வைப்பு அறை அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/1169/2020)

தீர்மான எண்.2042 அனுமதிக்கப்பட்டது

15)கரூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் புதை வடிகால் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் புதை வடிகால் இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் இனாம்கரூர் பகுதியில் வார்டு எண்.5,6,7,8 மற்றும் 10 பகுதிகளில் உள்ள சிறிய சந்துகளில் பிரதான புதைவடிகால் குழாய்கள் பதிக்கப்படாமல் விடுபட்டுள்ளது. அவ்வாறு விடுபட்ட பகுதிகளுக்கு புதிதாக புதை வடிகால் குழாய்கள் அமைக்கப்பட்டால் தான் அப்பகுதி குடியிருப்புகளுக்கு புதை வடிகால் குழாய் இணைப்பு வழங்க இயலும். எனவே இப்பணியினை விரைந்து முடிக்க வேண்டி விடுபட்டுள்ள பகுதிகளில் பிரதான புதை வடிகால் குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ5/2020)

தீர்மான எண்.2043 அனுமதிக்கப்பட்டது

16)கரூர் நகராட்சி, இனாம்கரூர் பகுதியான 1 முதல் 7 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/227/2020)

தீர்மான எண்.2044 அனுமதிக்கப்பட்டது

17)கரூர் நகராட்சி, இனாம்கரூர் பகுதியான 8 முதல் 14 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/370/2020)

தீர்மான எண்.2045 அனுமதிக்கப்பட்டது

18)கரூர் நகராட்சி, இனாம்கரூர் பகுதியான வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்ட 75 ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைபம்பு மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடை காலத்தில் பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தட்டுபாடின்றி தண்ணீர் வழங்கும் வகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் கூடுதலாக குடிநீர் விநியோக குழாய் இறக்கவும் மற்றும் சிறுமின் விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொது மக்களுக்கு சீராக தண்ணீர் வசதி செய்யும் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார், கேபிள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2046 அனுமதிக்கப்பட்டது

19)கரூர் நகராட்சி, இனாம்கரூர் பகுதியான வார்டு எண்.8 முதல் 14 வரை உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்ட 89 ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைபம்பு மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடை காலத்தில் பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தட்டுபாடின்றி தண்ணீர் வழங்கும் வகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் கூடுதலாக குடிநீர் விநியோக குழாய் இறக்கவும் மற்றும் சிறுமின் விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொது மக்களுக்கு சீராக தண்ணீர் வசதி செய்யும் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார், கேபிள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2047 அனுமதிக்கப்பட்டது

20)கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியான வார்டு எண்.37 முதல் 42 வரை உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்ட 101 ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைபம்பு மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடை காலத்தில் பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தட்டுபாடின்றி தண்ணீர் வழங்கும் வகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் கூடுதலாக குடிநீர் விநியோக குழாய் இறக்கவும் மற்றும் சிறுமின் விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொது மக்களுக்கு சீராக தண்ணீர் வசதி செய்யும் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார், கேபிள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2048 அனுமதிக்கப்பட்டது

21)கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியான வார்டு எண்.43 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்ட 95 ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைபம்பு மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடை காலத்தில் பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தட்டுபாடின்றி தண்ணீர் வழங்கும் வகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் கூடுதலாக குடிநீர் விநியோக குழாய் இறக்கவும் மற்றும் சிறுமின் விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பொது மக்களுக்கு சீராக தண்ணீர் வசதி செய்யும் பணியும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார், கேபிள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2049 அனுமதிக்கப்பட்டது

22)கரூர் நகராட்சி, தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதியான 33 முதல் 40 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மூலக்காட்டனூர் நீருந்து நிலையத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/226/2020)

தீர்மான எண்.2050 அனுமதிக்கப்பட்டது

23)கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியான 41 முதல் 48 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மூலக்காட்டனூர் நீருந்து நிலையத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் மூலம் ஏற்கனவே அமைக்கப்பட்ட குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக குடிநீர் பிரதானக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/225/2020)

தீர்மான எண்.2051 அனுமதிக்கப்பட்டது

24)கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியான வார்டு எண்.37 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைபம்பு மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் கோடை காலத்தில் பொது மக்களின் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு தட்டுபாடின்றி தண்ணீர் வழங்கும் வகையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைபம்புகள் பழுதடைந்துள்ளதால் புதியதாக 2எச்.பி திறன் கொண்ட சிறுமின் விசைபம்புகள் பொருத்தி பொது மக்களுக்கு சீராக தண்ணீர் வசதி செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறுகளில் புதிய மின்மோட்டார், கேபிள் மற்றும் விநியோக குழாய்கள் ஆகியவற்றை மாற்றி சரி செய்து கொடுக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.45 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2052 அனுமதிக்கப்பட்டது

25)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, காமராஜபுரம் மெயின் ரோடு பகுதியில் மனித ஆய்வுக் குழி எண்.112 முதல் 113 வரை பதிக்கப்பட்டுள்ள 450மி.மி., ஆர்.சி.சி., புதை வடிகால் குழாய் உடைந்து கழிவுநீர் வெளியேற வழியில்லாமல் சாலையில் வழிந்து செல்கிறது. இதனால் அப்பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே அப்பகுதி மக்களின் பொதுசுகாதார நலன் கருதி பழுதடைந்த 450மி.மி., ஆர்.சி.சி., குழாய்களை உடன் மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் (இ5/279/2020

தீர்மான எண்.2053 அனுமதிக்கப்பட்டது

26)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதியான வார்டு எண்.42 கரட்டுப்பாளையம், பாறையூர், தோரணக்கல்பட்டி ஜல்லிவாடா நாயக்கனுர் பகுதிகளில் உள்ள தெருக்களின் விரிவாக்கப்பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்படாமல் உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு புதிய முறையில் குடிநீர் இணைப்பு வழங்க இயலாமல் உள்ளது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி விடுபட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/230/2020)

தீர்மான எண்.2054 அனுமதிக்கப்பட்டது

27)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, வாங்கப்பாளையம் முதல் அருகம்பாளையம் அருகம்பாளையம் கிழக்கு வரை IUDM திட்டத்தில் வடிகால் அமைக்கும் பணியானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி அருகம்பாளையம் மெயின் சாலை தெற்கு பகுதியில் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திற்கு செல்லும் குடிநீர் மெயின் ஏ.சி பம்பிங் லைன் மழைநீர் வடிகாலின் மையப்பகுதியில் வருவதால் மேற்படி குடிநீர் மெயின் பம்பிங் லைனை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. மேலும் வடிகால் அமைக்கும் திட்டப்பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதாலும், அருகம்பாளையம் மெயின் சாலை தெற்கு பகுதியில் உள்ள ஏ.சி பம்பிங் லைனிற்கு பதிலாக 450 மீட்டர் நீளத்திற்கு புதிதாக குடிநீர் மெயின் பம்பிங் லைனை அமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்படி குடிநீர் மெயின் குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.32.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/1169/2020)

தீர்மான எண்.2055 அனுமதிக்கப்பட்டது

28)கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து kfw குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் அமைக்கப்பட்ட பொன் நகர் நீருந்து நிலையத்தில் உள்ள மூன்று எண்ணிக்கையிலான 25எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் மூலம் நீருந்து செய்து குடிநீர் பிரதானக் குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக அமைக்கப்பட்ட பகிர்மானக் குழாய்களின் மூலமாக பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி 25எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் மின்மோட்டார் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2056 அனுமதிக்கப்பட்டது

**29)**கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பழைய குடிநீர் திட்டத்தில் அமைக்கப்பட்ட மூலக்காட்டனூர் நீருந்து நிலையத்தில் உள்ள **25**எச்.பி, **10**எச்.பி மற்றும் **7.5**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் மூலம் நீருந்து செய்து குடிநீர் பிரதானக் குழாய்கள் மூலம் முல்லை மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் அமைக்கப்பட்ட **10**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார் நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக அமைக்கப்பட்ட பகிர்மானக் குழாய்களின் மூலமாக பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி **25**எச்.பி, **10**எச்.பி மற்றும் **7.5**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் மின்மோட்டார் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**3.80** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ3/1145/2020)**

தீர்மான எண்.2057 அனுமதிக்கப்பட்டது

**30)**கரூர் நகராட்சி, தாந்தோணி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் **100**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார் மூலம் நீரேற்றம் செய்து ஏற்கனவே திட்டத்தில் அமைக்கப்பட்ட நீருந்து நிலையங்களின் மூலம் நீருந்து செய்து குடிநீர் பிரதானக் குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் நீரேற்றம் செய்து வார்டுகளில் அமைக்கப்பட்ட பகிர்மானக் குழாய்களின் மூலமாக பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி **100**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்து பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் நீரேற்றம் செய்ய ஏதுவாக **100**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டாரில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்யும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**1.10** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ3/1145/2020)**

தீர்மான எண்.2058 அனுமதிக்கப்பட்டது

**31)**கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**45**, குறிஞ்சி நகர் சவுரிமுடித்தெரு மற்றும் வார்டு எண்.**38**, மகாலட்சுமி பார்க் ஆகிய பகுதிகள் மேடாக இருப்பதினால் வடிகால் அமைத்து கழிவுநீர் வெளியேற்ற வழியில்லாத காரணத்தினால் அப்பகுதிகளில் சேகரிப்பு கிணறுகள் அமைக்கப்பட்டு அதில் சேகரமாகும் மழைநீர் மற்றும் கழிவுநீர் ஆகியவற்றினை **2**எச்.பி மற்றும் **7.5**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் கழிவுநீரானது வெளியேற்றப்பட்டு வருகின்றது. மேற்படி **2**எச்.பி மற்றும் **7.5**எச்.பி திறன் கொண்ட மின்மோட்டார்கள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளதால் மின்மோட்டார் சரி செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி மழைநீர் மற்றும் கழிவுநீர்

ஆகியவற்றினை வெளியேற்றம் செய்ய ஏதுவாக 2எச்.பி மற்றும் 7.5எச்.பி திறன் கொண்ட மின்மோட்டாரில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்யும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2059 அனுமதிக்கப்பட்டது

32)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35, சணப்பிரட்டி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு காவேரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்டு கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றம் செய்து மூலக்காட்டனூர் நீருந்து நிலையத்தில் இருந்து நீருந்து செய்து குடிநீர் பிரதானக் குழாய்கள் மூலம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக அமைக்கப்பட்ட பகிர்மானக் குழாய்களின் மூலமாக பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திருச்சி பிரதான சாலையில் நெடுஞ்சாலைதுறையின் மூலம் சாலை விரிவாக்கம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டதால் மூலக்காட்டனூர் நீருந்து நிலையத்தின் அருகில் இருந்து திருச்சி பிரதான சாலை வரை அமைக்கப்பட்ட பகிர்மானக் குழாய்கள் மாற்றி கூடுதலாக குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்படி குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ3/1145/2020)

தீர்மான எண்.2060 அனுமதிக்கப்பட்டது

33)கரூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சிக்கு கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்கண்டுள்ள பணிகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ3/2686/2019 நாள்.26.02.2020 மற்றும் 28.02.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கரூர் நகராட்சி 36வது வார்டு சாய் நகரில் சண்முகம் மளிகை கடை முதல் சேகர் மளிகை கடை வரை சிமெண்ட் சாலை அமைத்தல் (160மீட்டர்) | 8.00 |
| 2 | கரூர் நகராட்சி 35வது வார்டு நரிகட்டியூர் குணசேகரன் வீடு முதல் காளிமுத்து வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல் (160மீட்டர்) | 8.00 |

| | | |
|---|---|---|
| 3 | கரூர் நகராட்சி 33வது வார்டு சணப்பிரட்டி பகுதியில் மயான கொட்டகையுடன் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 10.00 |
| | மொத்தம் | 26.00 |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம். ( இ1/945/2020)

தீர்மான எண்.2061 பதிவு செய்யப்பட்டது.

**34)**கரூர் நகராட்சியில் **2018 – 2019** ஆம் ஆண்டில் பொதுநிதி பணிகள் மற்றும், கல்வி நிதி பணி மற்றும் குடிநீர் பணியினை மேற்கொள்ளுதலின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் **30.05.2018** ம் தேதி அன்று Thina Boomi Trichy மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.**9476** /–ஐ Thina Boomi,Trichy அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.**9476** /– பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6991/2019)**

தீர்மான எண்.2062 அனுமதிக்கப்பட்டது

**35)** எஸ்.குமார் அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.**46991/–** வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம். **(பி6/6772/2019)**

தீர்மான எண்.2063 அனுமதிக்கப்பட்டது

**36)** RPS Construction நிறுவனம் கரூர் நகராட்சியில் **2015 – 2016**ம் ஆண்டு பணிகள் மேற்கொள்ள வைப்புத் தொகை ரூ.**28,250/–** செலுத்தி உள்ளார். மேற்படி பணிக்கு டெண்டர் கிடைக்காததால் தான் செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் வரைவாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின் படி தொகை ரூ.**28250/–** வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம். (பி6/9506/2019)

தீர்மான எண்.2064 அனுமதிக்கப்பட்டது

37) V.ராசப்பன் ஒப்பந்ததாரர் இந்நகராட்சியில் 2015 – 2016ம் ஆண்டு பணிகள் மேற்கொள்ள வைப்புத் தொகை ரூ.9000/– செலுத்தி உள்ளார். மேற்படி பணிக்கு டெண்டர் கிடைக்காததால் தான் செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கையில் தடை ஏதும் இல்லாததாலும், மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் வரைவாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின் படி தொகை ரூ.9000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம். (பி6/10436/2019)

தீர்மான எண்.2065 அனுமதிக்கப்பட்டது

**38)**இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கீழ்க்காணும் கடைகளின் குத்தகை உரிம காலம் 9 ஆண்டுகள் 31.3.2018 உடன் முடிவடைந்ததால் மேற்படி கடைகளுக்கு அரசாணை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 03.07.2007–இல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தற்போதைய அங்காடி மதிப்பு மற்றும் மறு மதிப்பீட்டுபடி வாடகை மறு நிர்ணயம் செய்ய சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையிலான மண்டல கண்காணிப்பு குழுவிற்கு மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி கருத்துரு தயார் செய்து அனுப்பப்பட்டது.

மேற்படி கருத்துருவின் பேரில் 04.02.2020 அன்று சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மண்டல கண்காணிப்பு குழு கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு 5 கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ எ ண். | வ.வி.எண். | கடை உரிமதாரர் பெயர் ,கடையின் விவரம் | கடை எண் | கடையின் மொத்த பரப்பளவு சதுரடி | பழைய வாடகை | மண்டல கண்காணிப்பு குழுவில் மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 082/ 20000410 | கொங்கு விவசாயிகள் சங்கம் புதிய பேருந்து நிலையம் வடபுற மாடி கடை எண். 16 | 16 | 128 (9.5X13.5) RCC | 2214 | 4266 |
| 2. | 082/ 20000411 | கொங்கு விவசாயிகள் சங்கம் புதிய பேருந்து நிலையம் | 17 | 128 (9.5X13.5) RCC | 2214 | 4266 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | வடபுற மாடி கடை எண். 17 | | | | |
| 3. | 082/ 20000412 | கொங்கு விவசாயிகள் சங்கம் புதிய பேருந்து நிலையம் வடபுற மாடி கடை எண். 18 | 18 | 128 (9.5x13.5) RCC | 2213 | 4266 |
| 4. | 0521/20000348 | K.N.கோபி புதிய பேருந்து நிலையம் கடைஎண். 40A | 40A | 126 (1.25x11.25) RCC | 6589 | 14742 |
| 5. | 082/ 20000370 | எம். அமுதவேல் புதிய பேருந்து நிலைய தென்புற மாடி அறை | தென்புற மாடி அறை | 1029 (29X30.50) RCC | 2100 | 37044 |

மேற்படி மண்டல கண்காணிப்பு குழுவால் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.03.07.2007இல் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி தற்போதைய அங்காடி மதிப்பு அடிப்படையில் மண்டல கண்காணிப்பு குழுவில் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

(அ6/10459/2019)

தீர்மான எண்.2066 அனுமதிக்கப்பட்டது

39)கரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) 220 துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள 21.11.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி இரண்டாவது அறிவிப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் வழியாக அக்கார்ட் அட்வர்டேஸிங் ஏஜென்சி, சென்னை மூலமாக 17.10.2019 அன்று தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினகரன் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணத்தொகை ரூ.1,87,268ஐ விளம்பர மேலாளர் அக்கார்ட் அட்வர்டேஸிங் ஏஜென்சி, சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)மேற்படி செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/3280/2018)

தீர்மான எண்.2067 அனுமதிக்கப்பட்டது

40)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான குபாட்டோ தயாரிப்பு மினி எஸ்கலேட்டர்க்கு புதிய Teeth மற்றும் தேவையான மராமத்து பணிகள் செய்ய குபாட்டோ நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து மதிப்பீடு பட்டியல் பெற்று பணி மேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்.

மேற்படி புதிய Teeth விநியோகம் செய்ய குபாட்டோ நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற உதிரிபாக விற்பனையாளர் SGJ Auto Car Pvt (Ltd) திருநெல்வேலி நிறுவனம் ரூபாய் 84,782க்கு மதிப்பீடு பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி மதிப்பீடு பட்டியல் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப இருப்பதால் குபாட்டோ இயந்திரத்திற்கு தேவையான Teeth மற்றும் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் மராமத்து பணிகள் செய்து கொள்ள் மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி மேற்படி செலவினத்தை பொது நிதியில் செலவினம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.

2. கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான குபாட்டோ தயாரிப்பு மின் எஸ்கலேட்டர்க்கு புதிய Teeth மற்றும் தேவையான மராமத்து பணிகள் செய்ய குபாட்டோ நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை SGJ Auto Car Pvt (Ltd) திருநெல்வேலி குபாட்டோ இயந்திரத்திதிற்கு தேவையான பல் மற்றும் மராமத்து உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து ரூபாய் 84,782/– பொது நிதியில் செலவினம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ( எச்5/6507/2018)

தீர்மான எண்.2068 அனுமதிக்கப்பட்டது

41)கரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.30 தான்தோனி குடிதெருவில் அமைந்து உள்ள பொதுகழிப்பிடத்தின் கழிவு நீர் தொட்டியினுள் உறைந்த திடமமன நிலையில் உள்ள கழிவுகளை அகற்ற தனியார் கழிவு நீர் வண்டி மூலம் சுத்தம் செய்ய ரூ.40,000/– மதிப்பீபீட்டில் அப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டவிதி 1920 பிரிவு 15ன் கீழ் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று 02.01.2020 கோரப்பட்ட விலைப்புள்ளி அறிவிப்பில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

**REMOVING CONCTRETE**
**SLAB CELANING SEPTIC TANK AND FIXING CONCRETE SLAB**

| Sl.No | Name of the Registered Contractor | Amount |
|---|---|---|
| 1 | Thiru. N.Loganathan, Contractor | Rs.1990 ( ஒரு நடைக்கு) |
| 2 | M/s.PRG Construction. Karur | Rs.2050( ஒரு நடைக்கு) |
| 3 | Thiru.M.Prabakaran, B.E., Karur | Rs.2000( ஒரு நடைக்கு) |

மேற்படி பட்டியல் உள்ளபடி மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.N.லோகநாதனுக்கு வேலை உத்தரவு வழங்கியதையும் இதற்குண்டான செலவுத் தொகையையும் ரூ.40,000/– பொதுநிதியில் செலவினம் செய்ததையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

அலுவலக குறிப்பு:

1. பதிவு செய்யலாம்.
2. கரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.30 தான்தோனி குடிதெருவில் அமைந்து உள்ள பொதுகழிப்பிடத்தின் கழிவு நீர் தொட்டியினை சுத்தம் செய்ய அவசர அவசியத்தை முன்னிட்டு ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி 1920 பிரிவு 15ன் கீழ் வேலை உத்தரவு வழங்கியதையும் பட்டியல் தொகை பொது நிதியில் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். ( இ1/281/2020)

தீர்மான எண்.2069 பதிவு செய்யப்பட்டது.

42)கரூர் நகராட்சியில் 2018 – 2019 ஆம் ஆண்டில் பொதுநிதி பணிகள், கல்வி நிதி பணி மற்றும் குடிநீர் பணியினை மேற்கொள்ளுதலின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 04.07.2019 ம் தேதி அன்று Makkal Kural நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.4738/– ஐ Makkal Kural, நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.4738 /—ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 4966 /2019)

தீர்மான எண்.2070 அனுமதிக்கப்பட்டது

43)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22ல் அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள அம்மா உணவகத்தின் தென்புறத்தில் ஜன்னல் பகுதிகளில் ஷிட் அமைத்தல், மற்றும் வயரிங் பழுதடைந்து ஆபத்தான நிலையிலுள்ளதால் புதியதாக கேபிள்கள் அமைத்து மின் பணிகள் செய்தல், இரும்பிலான படிகள் அமைத்தல், மழைநீர் சேகரிப்பு குழாய் அமைத்தல் போன்ற கூடுதல் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.40 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வரைவு செய்து அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தொகை ரூ.4.40 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/ 945 /2020)

தீர்மான எண்.2071 அனுமதிக்கப்பட்டது

44)கரூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் தென்மேற்கு பகுதியில் கட்டணக்கழிப்பிடம் இயங்கி வருகிறது. கரூர் பேருந்து நிலையத்திற்கு நாள்தோறும் 20000க்கும் மேற்பட்ட பயணிகள் வந்து போவதால், மேற்கண்ட கழிப்பிடம் போதுமானதாக இல்லாததால் தாய்மார்கள் பாலூட்டும் அறைக்கு பின்புறம் புதியதாக நவீன கழிப்பிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வரைவு செய்து அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 945/20)

தீர்மான எண்.2072 அனுமதிக்கப்பட்டது

45)கரூர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019—2020 ஆண்டின்கீழ் கரூர் நகராட்சிக்கு மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்கண்டுள்ள பணிகளுக்கு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் அவர்களின் செயல்முறைகள் கடித ந.க.எண்.அ3/2835/2019 நாள்.10.03.2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தென்கிழக்கு பகுதியில் பழுதடைந்த சுற்றுச்சுவரை இடித்து புதிதாக சுற்றுச்சுடர் கட்டுதல் | 4.00 |
| 2 | நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதியதாக நவீன கழிப்பிடம் கட்டுதல் | 8.00 |
| | **மொத்தம்** | **ரூ.12.00 லட்சம்** |

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.2073 பதிவு செய்யப்பட்டது.

**46)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான EICHER தயாரிப்பு வாகன எண்.TN 47 AH 8781 க்கு **2019** ஆண்டிற்கான தகுதிச் சான்றிதழ் புதுபிக்க தேவையான மராமத்து மற்றும் ரிப்பேர் பணிகள் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளில் இருந்து **18.12.2019** விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள அவ்வாகனத்தின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி **1920** பிரிவு **15**ன்கீழ் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று கோரப்பட்ட விலைப்புள்ளி அறிவிப்பில் **18.12.2019** அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

FC REPAIR AND MAINTANANCE WORK OF TN 47 AH 8781/ 12/2019

| Sl.No. | Name of the workshop | Amount |
|---|---|---|
| 1 | Lakshmi Auto Diesel works, Mettur Dam | Rs.1,09,950/- |
| 2 | Sri Jothi Murugan Motor Works, Salem | Rs.1,22,050/- |
| 3 | Sri Ganapathy Motor Works, Gobichettipalayam | Rs.1,22,400/- |

மேற்படி பட்டியல் உள்ளபடி மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel works, Mettur Dam நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதையும் இதற்குண்டான செலவுத் தொகை ரூ.**1,09,950/–**யை பொதுநிதியில் செலவினம் செய்ததையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு**
**1)**பொதுசுகாதாரப் பிரிவு டிப்பர் வாகன எண்.TN 47 AH 8781 க்கு தகுதி சான்றிதழ் புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் செய்ய குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Lakshmi Auto Diesel works, Mettur Dam நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதையும், இதற்குண்டான உத்தேச செலவுத் தொகை கரு.**1,09,950/–**யை பொதுநிதியில் செலவினம் செய்ததையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**2)**மேற்படி வாகனத்திற்கு அரசின் உச்சவரம்பு தொகைக்கு மேல் உள்ள கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். **(10021/2019/எச்5)**

தீர்மான எண்.2074 பதிவு செய்யப்பட்டது.

**47)**கரூர் நகராட்சியில் **2019–2020**ம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவு திட்டம் மற்றும் **2020–2021**ம் ஆண்டிற்கான உத்தேச வரவு–செலவு திட்ட அறிக்கையினை தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். **(பி1/540/2020)**

தீர்மான எண்.2075 அனுமதிக்கப்பட்டது

**48)** கரூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களை குத்தகை மற்றும் வாடகைக்கு வழங்கப்படும் போது சேவை வரி வசூல் செய்து மத்திய அரசின் சேவை வரி தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். உதவி ஆணையர் மத்திய கலால் மற்றும் சேவை வரி திருச்சிராப்பள்ளி அவர்களின் உத்தரவில் **01.06.2007** முதல் **31.08.2008** வரையுள்ள காலத்திற்கு செலுத்தப்பட வேண்டிய சேவை வரி தொகைக்கு அபராதத் தொகை விதித்து வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD)No.24488/2016 & WMP (MD)No.17675/2016ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கில் **21.12.2016**ம் தேதியில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் Customs, Central Excise and Service Tax Appellate Tribunals (CESTAT) சென்னையில் வழக்கறிஞர் திரு.பி.சீனிவாசன் அவர்கள் மூலமாக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய அரசின் சப்கா விஸ்வாஸ் (நிலுவையில் உள்ள மத்திய கலால் மற்றும் சேவை வரி வழக்குகளுக்கான தீர்வு) திட்டம் **2019**ன்படி மேற்படி மேல்முறையீட்டு மனுவின் பேரில் சமரச தீர்வு காணும் பொருட்டு

SABKA VISHWAS (LEGACY DISPUTE RESOLUTION) SCHEME-2019 Designated Committee Trichy Declaration No.261290001391 Dated.28.12.2019 and section 125 of the Finance (No.2) Act., 2019ன்கீழ் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| Sl. No | Category | Time | | Tax dues | | Tax relief | Pre-Deposit any other deposit of duty | Estimate amount payable | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | From Period | To Period | Name | Amount | | | Name | Amount |
| 1 | Litigation | 01.06.2007 | 31.08.2008 | Renting of immovable property service | 3182863 | 2228004 | 557001 | Renting of immovable property service | 397858 |

மேற்படி திட்டத்தின்கீழ் மத்திய கலால் Designated Committee Trichy தீர்மானத்தின்படி இந்நகராட்சியால் செலுத்த வேண்டிய தொகை ரூ.**31,82,863/–**ல் சப்கா விஸ்வாஸ் சமரச திட்டத்தின்கீழ் ரூ.**3,97,858/–** (ரூபாய் மூன்று லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தி எட்டு மட்டும்) செலுத்தினால் போதுமென மத்திய சரக்கு மற்றும் சேவை வரி உதவி ஆணையர் கரூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி சப்கா விஸ்வாஸ் திட்டம் **2019** திட்டத்தின்கீழ் சமரச தொகையாக ரூ.**3,97,858/–** மட்டும் மத்திய சரக்கு மற்றும் சேவை வரி கணக்கிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மத்திய அரசின் சப்கா விஸ்வாஸ் திட்டம் **2019**ன்படி தொகை ரூ.**3,97,858/–** (ரூபாய் மூன்று லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தி எட்டு மட்டும்) சேவை வரி கணக்கிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். **(அ6/201/2013)**

தீர்மான எண்.**2076** அனுமதிக்கப்பட்டது

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**